Judicial Form No. 53
(see Rule 42)
Deposition of the Witness
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, UTHAMAPALAYAM.
CC No.264/2021 Date:05.08.2026
Deposition of witness for prosecution: PW4 ( LW6 )
Defence:
Court:

| | | | |
|---|---|---|---|
| Name | பிரதீப் | Village | சுருளிபட்டி |
| Father/ Husband Name | முருகன் | Taluk | உத்தமபாளையம் |
| Age | 27/2026 | Calling | கறிகடை |

Solemnly affirmed in accordance with the provision of the Oaths Act 1969 (central Act 44 of 1969) on 05.08.2026. TIME 12.40 PM

**எதிரி ஆஜரில்லை. எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.**

**முதல் விசாரணை :–**

நான் தற்போது சுருளிபட்டியில் குடியிருந்து வருகிறேன். என்னிடம் காட்டபடும் பார்வை மகஜரிலுள்ள 2 வது சாட்சி கையொப்பம் கையெழுத்து என்னுடையது தான். அது **அ.த.சா.ஆ.3** ஆகும். கடந்த 13.01.2019–ம் தேதி இரவு 11.00 மணியளவில் சுருளிபட்டியில் உள்ள கறிக்கடை தெருவில் போலிசார் செயின் அறுப்பு வழக்கு சம்மந்தமாக விசாரித்து , படம் வரைந்து, நேரில் வந்த விசாரணை செய்ததற்கு சாட்சியாக என்னிடமும், ஞானசேகரன் என்பவரிடமும் கையொப்பம் வாங்கினார்கள். போலிசார் என்னை விாசரித்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை :–**

2) அ.சா.1 எனது உறவினர் அல்ல, ஆனால் எனது ஊரைச்சேர்ந்த, எனக்கு தெரிந்த நபர். நான் காவல் நிலையத்தில் வைத்து கையெழுத்து செய்துவிட்டு, சம்பவ இடத்தில் கையெழுத்து செய்ததாக பொய்யாக கூறுகிறேன் என்றால் சரியல்ல.

சாட்சி இன்று இந்நீதிமன்றத்தில் ஆஜராகி என் முன்னிலையில் திறந்த நீதிமன்றத்தில் வாய்மொழியாக சாட்சியம் அளித்ததை இந்நீதிமன்றம் தட்டச்சர் மூலமாக பதிவு செய்து சாட்சி படித்து பார்த்து/விளக்கி கூறி சரியென ஒப்புக்கொண்டுகையொப்பம் செய்துள்ளார்.

Sd/P. Kamarasu
நீதித்துறை நடுவர்,
உத்தமபாளையம்.

Judicial Form No. 53
(see Rule 42)
Deposition of the Witness
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, UTHAMAPALAYAM.
CC No.264/2021 Date:05.08.2026
Deposition of witness for prosecution: PW5 ( LW7 )
Defence:
Court:

| | | | |
|---|---|---|---|
| Name | சுரேஷ் | Village | சுருளிபட்டி |
| Father/ Husband Name | ஆண்டிச்சாமி | Taluk | உத்தமபாளையம் |
| Age | 37/2026 | Calling | திராட்சை வியாபாரம் |

Solemnly affirmed in accordance with the provision of the Oaths Act 1969 (central Act 44 of 1969) on 05.08.2026. TIME 12.40 PM

**எதிரி ஆஜரில்லை. எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.**

**முதல் விசாரணை :–**

நான் தற்போது சுருளிபட்டியில் குடியிருந்து வருகிறேன். என்னிடம் காட்டபடும் ஒப்புதல் வாக்குமூலம் மற்றும் இரண்டு அத்தாட்சிகளிலும் உள்ள 1–வது சாட்சி கையொப்பம் என்னுடையது தான். ஒப்புதல் வாக்குமூலம் மற்றும் இரண்டு அத்தாட்சிகளிலும் உள்ள 1–வது சாட்சி கையொப்பம் **அ.த.சா.ஆ.4, 5, 6** ஆகும். கடந்த 10.02.2019–ம் தேதி காலை 09.00–09.30 மணியளவில் நான் எனது திராட்சை தோட்டத்திற்கு செல்வதற்காக அணைப்பட்டியை கடந்து SSS தோட்டம் அருகே சென்ற போது, ஒரு நபர் பைக்கில் வந்தவரை மறித்து போலிசார் விசாரித்தனர். அப்போது அந்நபர் சுருளிபட்டியில் களவு செய்த நகைகளை கம்பம் – ஊத்துக்காடு ரோட்டில் உள்ள மண்டபம் அருகே செடி மறைவில் மறைத்து வைத்து இருப்பதாக ஒப்புக்கொண்டார். பின்னர் போலிசார் அந்நபரை மேற்படி மண்டபத்திற்கு அழைத்து சென்றனர், நானும் உடன் சென்றேன். எங்களுடன் மாயாண்டி என்பவரும் வந்தார். சுமார் 11.30 மணியளவில் மேற்படி மண்டபம் அருகே செடி மறைவில் மறைத்து வைத்திருந்த நகைகளை எதிரி எடுத்துகொடுத்தார்.போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை :–**

2) அ.சா.1 எனது உறவினர் அல்ல, ஆனால் எனது ஊரைச்சேர்ந்த, எனக்கு தெரிந்த நபர். எதிரி அளித்த ஒப்புதல் வாக்குமூலத்தில் எங்கு வைத்து கையொப்பம் செய்தேன் என்றால் மண்டபம் அருகே ஆகும். மொத்தம் 3 கையொப்பம் செய்தேன். என்னுடன் மாயாண்டி என்பவரும் கையொப்பம் செய்தார், வேறு நபர்கள் கையொப்பம் செய்யவில்லை. மண்டபத்தின் அருகே செடி மறைவில் இருந்து செயின் தவிர வேறு நகைகள் எடுக்கப்பட்டதா என்றால் இல்லை. வேறு பொருட்கள் எடுத்தற்காக நான் கையொப்பம் செய்யவில்லை என்றால் இல்லை. அசா.1 எனக்கு வேண்டிய நபர் என்பதால் காவல்நிலையத்தில் வைத்து கையொப்பம் செய்து விட்டு அ.சா.1 க்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

சாட்சி இன்று இந்நீதிமன்றத்தில் ஆஜராகி என் முன்னிலையில் திறந்த நீதிமன்றத்தில் வாய்மொழியாக சாட்சியம் அளித்ததை இந்நீதிமன்றம் தட்டச்சர் மூலமாக பதிவு செய்து சாட்சி படித்து பார்த்து/விளக்கி கூறி சரியென ஒப்புக்கொண்டுகையொப்பம் செய்துள்ளார்.
Sd/P. Kamarasu
நீதித்துறை நடுவர்,
உத்தமபாளையம்.